கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

எம்.சி.ஓ.பி எண்.28/2021

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.வனிதா பாஸ்டின் | தொழில் | |
| த/க பெயர் | ஆரோக்கிய செபஸ்தியான் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 10.06.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 1 **ஆம்** மனுதாரர் ஆவேன். வழக்கு விபத்தில் இறந்தவர் எனது கணவர் ஆவார். 2 மற்றும் 3 மனுதாரர்கள் என் மகன் மற்றும் மகள் ஆவார்கள். இறந்து போன 4 ஆம் மனுதாரர் எனது கணவரின் தாயார் ஆவார். வழக்கு விபத்தில் என் கணவர் இறந்து போய் அதற்கான இழப்பீடு கோரி நாங்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம். மனுதாக்கல் செய்த பின்பு என் கணவரின் தாயார் இறந்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். வழக்கு விபத்திற்கான முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது. எனது கணவருக்கான பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது. எனது கணவருக்கான வாரிசு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியிடப்படுகிறது. 1 முதல் 3 மனுதாரர்களுக்கான ஆதார் அட்டையின் நகல்கள் 3 **ம.சா.ஆ.4**(வரிசை)ஆக குறியிடப்படுகிறது. 1 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட விபத்து வாகனம் 2 ஆம்

எதிர்மனுதரர் பாதியப்பட்ட காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்ததற்கான காப்பீடு சான்றிதழ் **ம.சா.ஆ.5** ஆக குறியிடப்படுகிறது.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை – வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.06.10 17:51:12 +0530

Additional District Judge(FAC),

Dindigul.